**Dina Malar**
September 10, 2007

**Translation**

**ZWM centre inaugurated – project to cost Rs 13 lakh**

PepsiCo, Exnora and Tenkasi Corporation have set up a Zero Waste Management project jointly to create a clean and green Tenkasi at a cost of Rs 13 lakhs. This project was inaugurated yesterday. Present at the function were Mr Gomathynayakan – Commissioner and Mr Kalimuthu - Prashakti school Principal. Mrs Vijayalashmi welcomed the guests.

The lamp was lit by the Principal of Parashakti school. Abhiram Seth – ED. Exports and External Affairs, PepsiCo, inaugurated the program. He said that this is an extraordinary project and in the first phase of the program, three wards - 11,14,21 - will be covered and will reach out to 1,550 households. Mr Neelakandan, Director of the Environment Department, spoke on the role of the Environment Department in Solid Waste Management. Mrs Mangalam - Vice Chairperson, Exnora, spoke in depth explaining the project details.



தென்காசியில் பூஜ்ய கழிவு மைய துவக்க விழாவில் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் சசிகலா, பராசக்தி வித்யாலயா முதல்வர் கல்யாணி சங்கர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்தனர்.

# தென்காசியில் ரூ.1 3 லட்சத்தில் பூஜ்ய கழிவு மையம் திறப்பு

தென்காசி, செப். 10—

தென்காசியில் 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூஜ்ய கழிவு மேலாண்மை மையம் திறக்கப்பட்டது.

தென்காசி தலைமை போஸ்ட் ஆபீஸ் அருகே பசுமையான சூழலோடு குப்பைகளற்ற இடமாக மாற்றும் நோக்கில் தென்காசி நகராட்சி, எக்ஸ்னோரா, பெப்ஸிகோ ஆகியவை இணைந்து பூஜ்ய கழிவு மேலாண்மை மையம் அமைத்துள்ளது. 13 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இம்மைய திறப்பு விழா நடந்தது.விழாவிற்கு நகராட்சி தலைவர் கோமதிநாயகம் தலைமை வகித்தார். கமிஷனர் காளிமுத்து, குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் சசிகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். எக்ஸ்னோரா மாவட்ட தலைவர் விஜயலட்சுமி வரவேற்றார்.

கல்லூரி முதல்வர் சசிகலா, பராசக்தி வித்யாலயா முதல்வர் கல்யாணி சங்கர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்தனர்.பெப்ஸிகோ இந்தியாவின் வெளியுறவுத்துறை மற்றும் ஏற்றுமதி செயல் இயக்குநர் அமிராம் சேத் மையத்தை திறந்து வைத்தார். திட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில், பூஜ்ய கழிவு மேலாண்மை ஒரு தனித்துவமிக்க திட்டமாகும். தென்காசி திட்டத்தின் முதற் கட்டத்தில் 11, 14, 21 ஆகிய மூன்று வார்டுகளிலுள்ள ஆயிரத்து 550 வீடுகளை அடைய திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.திடக்கழிவு மேலாண்மையில் சுற்றுச்சூழல் துறையின் பங்கு குறித்து சுற்றுச்சூழல் துறை இயக்குநர் நீலகண்டன் பேசினார். எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் துணை தலைவர் மங்களம் பாலசுப்பிரமணியம் திட்ட விளக்கம் பற்றி பேசினார். சங்கரநாராயணன், நகராட்சி துணைத் தலைவர் இப்ராகிம், திருமாறன், கவுன்சிலர் விஜயலட்சுமி, இலஞ்சி ஆர்.பி.பள்ளி தலைமையாசிரியர் முத்தையா, மாடசாமி சோதிடர், சீனிவாசன், கவுன்சிலர் விஜயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.